# ஆர். இராஜன் - வெற்றிக்கதை



நான் இராஜன் வயது 34 சொந்தமாக காய்கறி கடை வைத்து நடத்திவருகிறேன். திருமணமானவன். எனக்கு சொந்த நிலங்கள் கிடையாது. கடை வருமானத்தை கொண்டு குடும்பம் நடத்தி வருகிறேன். வாரத்தில் 2 நாட்களுக்கு ஒரு முறை கும்பகோணம் மார்கெட் சென்று காய்கறிகள் வாங்கி வந்து குளிருட்டியில் வைத்து ஓரிரு நாட்களுக்கு விற்பனை செய்வது எனது வழக்கம் மற்றும் அக்கம் பக்கம் தோட்டத்தில் விலையும் காய்கறிகளை விலைக்கு வாங்கியும் விற்பனை செய்தும் வருகிறேன்.

தினசரி கொள்முதல் விலைகளை தெரிந்து கொள்வது மிகவும் சிரமமாகவே இருந்து வந்தது. மேலும் பல்வேறு பட்ட சில்லரை விற்பனையாளர்கள் யார் குறைவான லாபத்தில் விற்கிறார்கள், யார் அதிக விலையில் விற்கிறார்கள் என்பது எனக்கு புரியாத ஒன்றாகவே கடந்த 4 வருடமாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கும்பகோணம் மார்கெட் அனாலிஸ்ட் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து என்னுடைய செல் நம்பரை பதிவு செய்தேன்.என்னுடையது நோக்கியா செல்போன் (1200). தினமும் மதியம் 2.30 மணிக்கு விலை நிலவரங்களை தெரிந்து கொள்வேன்.

கும்பகோணம் மார்கெட்டின் கத்திரிக்காய் விலையை தெரிந்து கொள்கிறேன். அதை தெரிந்து கொண்டு விற்பனை விலையை குறைத்து பேசி காய்கறியை வாங்க முடிகிறது. சில நல்ல அதிக லாபம் எதிர்பார்க்காத சில்லரை வியாபாரிகளை அடையாளம் தெரிந்து கொள்ள இந்த இலவச எஸ்.எம்.எஸ் சேவை எனக்கு உதவியாக இருக்கிறது.

மேலும் ஒரு சில விவசாயிகள் தாங்கள் விலைவித்த காய்கறிகளை எனது கடையில் கொடுத்து பணம் பெற்று செல்கின்றனர். அவர்களுக்கு இந்த விலை நிலவரம் தெரிந்து கொள்முதல் செய்து கொள்ள முடிகிறது. நான் என்னுடைய அன்றாட வாடிக்கையார்களுக்கு குறைவான லாபத்தில் விலை வைக்கவும், விற்பனை செய்யவும் முடிகிறது. இந்த சேவையை பயன்படுத்த ஆரம்பித்து சில மாதங்களே ஆகிறது. அதனால் இப்போது எனக்கு மறைமுக லாபங்களே தெரிகிறது. நேரிடையான லாபம் போக போக தெரியும் என எதிர்பார்க்கிறேன்.


திரு. என்.ஆர். இராஜன்,

த/பெ. இராமமூர்த்தி,

96, வடக்கு வீதி,திருபுவனம்,

திருவிடைமருதூர் தாலுக்கா,

தஞ்சாவூர் மாவட்டம்,

அலைபேசி: 09791544662